**நாகப்பட்டினம் நகராட்சி**

**2023–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் –29–ம் நாள் வெள்ளி கிழமை காலை 11.00 மணியளவில்**

**நடைபெற்ற நகரமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கையின் தீர்மான நகல்**

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 29–09–2023 | **பொருள் எண்.1**<br>இந்நகராட்சியின் 2021-2022-ம் ஆண்டிற்கான தணிக்கைக்கட்டணம் ரூ.1,08,953/- (ரூபாய் ஒரு இலட்சத்து எட்டாயித்து தொள்ளாயிரத்து ஐம்பத்து மூன்று மட்டும்) செலுத்தக்கோரி உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை நாகப்பட்டினம் அவர்களின் கடிதம் ந.பெ.எண்.301/2023/அ1, நாள்04-09-2023ந் தேதிய கடிதத்தில் மேற்படி தொகையினை செலுத்தக்கோரி உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, நாகப்பட்டினம் அவர்களுக்கு உரிய அரசு தலைப்பில் செலுத்திடவும், மேற்படி தொகையினை அவசரம் அவசியம் கருதி நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்தப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு \| 1 \| மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.742/2018/பி1 | தீர்மானம் எண்.182<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 29–09–2023 | **பொருள் எண்.2**<br>தமிழ்நாடு அரசாணை எண் 10 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி UDA (2) துறை நாள் 19.01.2018 மற்றும் அரசாணை எண் 261, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி UDA (2) துறை நாள் 16.12.2022 அரசாணைகள் படி தயாரிக்கப்பட்டுள்ள நாகப்பட்டினம்–வேளாங்கண்ணி கூட்டு உள்ளூர் திட்ட குழுமத்தில் நாகப்பட்டினம் நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் உள்ள தொடர் கட்டிட பகுதிகள் வரையறுக்கப்பட்டு பட்டியல் இடப்பட்டுள்ளது. அப்பட்டியல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ள கூட்டத்தில் இறுதி ஒப்புதலிக்கப்பட உள்ளது. அப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு.<br>அலுவலககுறிப்பு \| 1 \| மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>ந.க.எண். 615/2023/எப்1. | தீர்மானம் எண்.183<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 29–09–2023 | **பொருள் எண்.3**<br>நாகப்பட்டினம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிக்கழிப்பறைகளை நகராட்சியின் கல்வி நிதியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளதை தொடர்ந்து அரசு ஆணை (நிலை) 77, நாள்.13-04-2015-ன்படி மாவட்ட ஆட்சித்தலைவரால் நிர்ணயம் செய்யப்பட்ட விலை விகிதத்தின்படி ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளைப் பின்பற்றி நகர் மன்றத்தின் அனுமதி பெற்று தனியார் நிறுவனத்தின் (Fully Contract Basis ) மூலம் 20 எண்ணம் தினக்கூலி தூய்மைப்பணியாளர்களைக்கொண்டு பராமரிப்பு பணிகள் நாளது தேதி வரை நடைபெற்று வருகிறது. இந்நிலையில் கடந்த 31-04-2023 இல் மேற்கண்ட பணி முடிவடைந்ததை தொடர்ந்து நிர்வாக நலன் கருதி நகராட்சி நிருவாக இயக்குநரின் வழிகாட்டு நெறிமுறைகளை எதிர்நோக்கி இந்நகர்மன்ற தீர்மான அனுமதி வழங்கியதின்பேரில் 01-06-2023 ஆம் தேதி முதல் 30-09-2023 வரை 4 மாதங்களுக்கு மேற்கண்ட பணி தொடர்ந்து நடைபெற்றுவருவதற்கு புதிய | தீர்மானம் எண்.184<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td rowspan="5"></td><td colspan="3">ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு போதிய கால அவகாசம் இல்லாத நிலையில் தொடர்புடைய ஒப்பந்தக்காரர் M/S. ரேன்ஸ் இன்ஜினியரிங் நிறுவனத்தரால் கொடுக்கப்பட்டுள்ள சம்மத கடிதத்தின்படி ஏற்கனவே கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின்படி நாள் ஒன்றுக்கு ரூ.385 வீதம் தொடர்ந்து 4 மாதங்களுக்கு பணி மேற்கொண்டதை அனுமதிக்கவும், அதற்கு உண்டான உத்தேச தொகை ரூ.10.50 இலட்சத்தை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td><td rowspan="5"></td></tr>
<tr><td rowspan="3">அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதிக்கலாம்</td></tr>
<tr><td>2</td><td>மேற்கண்ட உத்தேச செலவினதொகை நகராட்சி கல்வி நிதியில் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td>3</td><td>பணியில் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை மன்றம் அங்கீகரிக்கலாம்.</td></tr>
<tr><td colspan="3">ந.க.எண். 41/2020/எச்1</td></tr>
<tr><td rowspan="4">29–09–2023</td><td colspan="3">பொருள் எண்.4<br>இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் கொசு ஒழிப்பு பணிக்காக இயங்கிவரும் இயந்திரத்தில் (Foggin Machine) பழுதடைந்த பாகங்கள் சைலன்சர் (Silencer) மற்றும் உதிரிபாகங்கள் பழுதடைந்துள்ளதால் அதனை இயக்கமுடியாத சூழ்நிலை இருந்து வருவதால் அதனை பழுது நீக்கம் செய்து தருவதற்கு அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.15000/- க்கு( ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td><td rowspan="4">தீர்மானம் எண்.185<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td rowspan="2">அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
<tr><td>2</td><td>மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td></tr>
<tr><td colspan="3">ந. க.எண். 3865/2023/எச்1</td></tr>
<tr><td rowspan="4">29–09–2023</td><td colspan="3">பொருள் எண்.5<br>நாகப்பட்டினம் நகராட்சியில் 2023-2024ஆம் ஆண்டிற்கான உயர்நீதி மன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் புதியதாக தொடரப்படும் வழக்கு தொடர்பாக இந்நகராட்சியின் சார்பாக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் மூலம் வாதாடுவதற்கான வழக்கு கட்டணங்கள் மற்றும் வழக்கு தொடர்பான இதர செலவினங்கள் வழங்கப்படவேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td><td rowspan="4">தீர்மானம் எண்.186<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td rowspan="2">அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
<tr><td>2</td><td>மேற்கண்ட பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
<tr><td colspan="3">ந.க.எண். 2458/2023/அ4</td></tr>
<tr><td>29–09–2023</td><td colspan="3">பொருள் எண்.6<br>இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜ் காலனி குடியிருப்பு எண்.10ஜ இந்நகராட்சியில் பதிவறை எழுத்தராக புணிபுரிந்து ஒய்வு பெற்று திரு.எஸ்.தங்கவேல் (லேட்) என்பவரின் வாரிசுகளான திருமதி.த.சீதாலெட்சுமி</td><td>தீர்மானம் எண்.187<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | என்பவருக்கு பத்திர பதிவு செய்து தரகோரி தீர்ப்பு வந்த நிலையில் கால அவகாசம் மற்றும் மேல்முறையீடு சென்னை உயர்நீதிமன்ற வழக்கில் எம்.வேணுகோபால் வழக்கறிஞருக்கு நகராட்சி சார்பாக எதிர்வழக்கு நடத்துவதற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.20,000/- ம் கோரி நகராட்சி வழக்கறிஞரால் கடிதம் பெறப்பட்டது மேற்படி வழக்கறிஞர் கட்டணம் ரூ.20,000/-வழங்க மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதிபெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3 மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண். 2917/2023/அ4 | |
| 29–09–2023 | பொருள் எண்.7<br>நாகப்பட்டினம் நகராட்சியில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்து ஒய்வுபெற்ற திரு.எஸ்.ஆர்.தங்கவேல் என்பவருக்கு குறைந்த வருவாய் உள்ளவர்கள் குடியிருப்பதற்கான குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் காலணி வீட்டு எண்.10ஐ கிரயம் செய்துக்கொடுப்பதற்கு அரசாணை எண்.1740/ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள்.16-10-1981ல் அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி நகரமன்ற தீர்மான எண்.140 நாள்.03-03-1986ல் ஒப்புதல் பெறப்பட்டது. குடியிருப்பை கிரயம் செய்துகொடுப்பதற்கு மேற்படி நபர் அன்றைய தேதியில் ரூ.1000/-ம் மதிப்பிற்கான முத்திரைத்தாள் நாகப்பட்டினம் நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பித்து சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவுசெய்துக்கொள்ளலாமல் இருந்துவிட்டார். மேற்படி குடியிருப்பை கிரயம் செய்வது தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வழியாக அரசுக்கு முன்மொழி அனுப்பப்பட்டதில் அரசாணை (நிலை) எண்,96 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி5) நாள்.17-09-2011ல் திரு.எஸ்.ஆர்.தங்கவேல் அவர்களின் பெயருக்கு பத்திர பதிவு செய்து கொடுப்பதற்கு அனுமதியளித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேற்படிஅரசாணை பிறப்பிப்பதற்கு முன்பாகவே 07-01-2010ஆம் தேதியன்று திரு.எஸ்.ஆர்.தங்கவேல் என்பர் இறந்துவிட்டார். இந்நிலையில் மேற்படியாரின் மனைவி திருமதி.த.சீதாலெட்சுமி என்பவரின் 19-07-2012 ஆம் தேதிய கடிதத்தில் தனது கனவர் இறந்துவிட்டதால் காமராஜர் காலணி குடியிருப்பு 10-ஐ தனது பெயருக்கு பத்திர பதிவு செய்துக்கொடுக்க கோரியிருந்தார். இது தொடர்பாக அரசின் தெளிவுரை கோரப்பட்டதில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25706/2022/டிபி3 நாள்.12-01-2023 ல் திருமதி.த.சீத்தாலெட்சுமி பெயருக்கு பத்திர பதிவு செய்வதற்கு புதிய நகரமன்ற தீர்மானம் நிறைவேற்றியும் தற்போதைய ஆணையரின் செயற்குறிப்புடன் அனுப்பிவைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது குடியிருப்பை பத்திர பதிவு செய்ய பத்திரம் மற்றும் பதிவுக்கட்டணம் தோராயமாக ரூ.40,000/-க்கு மேல்செலவாகும் என தெரிகிறது. குடியிருப்பு எண்.10ற்கான கிரய கணக்கிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டுள்ளதால், தற்போதைய கிரயம் செய்வது தொடர்பான | தீர்மானம் எண்.188<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

செலவினத்தினை சம்மந்தப்பட்ட பணியாளரின் வாரிசுதாரர் திருமதி.த.சீதாலெட்சுமி என்பவர் ஏற்கும் பட்சத்தில் மேற்படி குடியிருப்பை பத்திர பதிவு செய்துக்கொடுக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |

ந.க.எண். 11878/78/அ4

---

**29-09-2023**

பொருள் எண்.8

இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் வாகனம் எண்.TN-51-H-9662 கழிவு நீர் ஊர்தி வாகனத்திற்கு கழிவுநீர் உறிஞ்சும் குழாய் பழுதடைந்துவிட்டதால் புதியதாக டயர் மற்றும் டியூப் வாங்குவதற்கான உத்தேசமான செலவினம் ரூ60,000/- க்கு ( ரூபாய் அறுபதாயிரம் மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அங்கீகரிக்கலாம். |

ந.க.எண். 3510/2023/எச்1

தீர்மானம் எண்.189

அ.கு.அனுமதிக்கப்பட்டது

---

**29-09-2023**

பொருள் எண்.9

நாகப்பட்டினம் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் இயங்கும் கழிவு நீர் வாகனம் TN-51-H-9622 ன் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 22-08-2023-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படியான இரண்டு விலைப்புள்ளிகள் வரைப்பெற்றுள்ளது அதன் விவரம்.

| வ.எண் | நிறுவனம் பெயர் | ஒப்பந்ப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|
| 1 | திரு.ஜி.தமிழ்செல்வன், ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | 2,49,368 |
| 2 | திரு.ஜி.கிருஷ்ணகுமார், கணபதி ஆட்டோ ஒர்க்ஸ், மன்னார்குடி . | 2,63,672 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி நிறுவனத்திற்கு வாகன பயன்பாட்டின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கிட மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | அவசர அவசியத்தை கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி நிறுவனத்திற்கு மன்றத்தின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். |

ந.க.எண். 3302/2023/எச்1

தீர்மானம் எண்.190

அ.கு.அனுமதிக்கப்பட்டது

---

**29-09-2023**

பொருள் எண்.10

**நகர்மன்ற உறுப்பினர் திருமதி.எஸ்.பதுருநிஷா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**

2-வது வார்டுக்குட்பட்ட ஜடையினா ஹாஜியார் தெரு கடைசி உட்புறம் முத்து நபிசா கார்டன் முற்றிலும் மண் சாலையாக உள்ளது. அது மழைகாலம் துவங்க உள்ளதால், மேற்படி சாலையை சிமெண்ட் சாலையாக அமைத்து தரவும், செய்யது பள்ளிகுளம் தெரு மேல்கரை கழிவுநீர் கால்வாய் மிகவும் மோசமாக உள்ளது. அதனை சீரமைத்து

தீர்மானம் எண்.191

தீர்மானிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | தரவும், நாகூர் தர்கா அலங்கார வாசல் சாலை, பெரிய கடைத்தெரு சாலை மற்றும் ஜவுளிகடைத்தெரு சாலைகள் மிகவும் பள்ளமாக உள்ளது. பல ஊர்களிலிருந்து வாகனங்கள் வந்து செல்வதால் நாகூர் கந்துரரிக்கு முன் அதனை சீரமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | |
| 29–09–2023 | பொருள் எண்.11<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி.எஸ்.பதுருநிஷா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>➢ 2-வது வார்டுக்குட்பட்ட தர்கா அருகில் யாணைக்கட்டி தெருவில் கட்டப்பட்டுள்ள பொது கழிவறையில் ஒரு இந்தியன் டாய்லெட்டும், மூன்று டாய்லெட் வெஸ்டன் டாய்லெட்டாக உள்ளது. அங்குள்ள கடைதெரு வாசிகள் அதனை முறையாக பராமரிக்க தெரியாமல் பழுதடைய செய்துள்ளனர். மேலும் போதிய தண்ணீர் வசதிகளும் இல்லை. மோட்டார் சரி செய்து கொடுக்கவும், வெஸ்டன் டாய்லெட்டை இந்தியன் டாய்லெட்டாக மாற்றி அமைத்தும், பாத்ரூம் அடைப்புகளை சரி செய்து தரவும் நடவடிக்கை எடுக்கவேண்டி இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.192<br>தீர்மானிக்கப்பட்டது. |
| 29–09–2023 | பொருள் எண்.12<br>**நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.தியாகு (எ) தியாகராஜன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>➢ 8-வது வார்டுக்குட்பட்ட சலவை குளம், தோட்டத்துக்குளம் பெருமாள்குளம், நீர்நிரப்ப பாசன வாய்க்கால் உள்ளது. தற்போது தூர்வாரபடாமல் மண் மூடி கிடப்பதுடன் ஆக்கிரமைப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே மழைகாலத்துக்கு முன்னதாகவே தூர்வாரி சுத்தம் செய்து நீர் நிரப்ப வழிவகை செய்யவேண்டும்.<br>➢ தோட்டத்துகுளம் வழியாகவே பெருமாள்குளம், சிவன்குளம், தர்கா குளம் போன்ற குளங்களுக்கு நீர் நிரப்ப முடியும் என்பதை தெரியப்படுத்துகிறேன்.<br>➢ ஐந்து வார்டுக்குட்பட்ட சுடுகாடு எனது வார்டுக்குட்பட்ட பகுதியில் அமைந்து இருப்பதால், அதற்கு செல்லும் வழி குண்டும் குழியுமாக உள்ளது எனவே மழைகாலத்துக்கு முன்னதாகவே அதனை சீரமைத்து தரவேண்டும்.<br>➢ துரௌபதி அம்மன் கோவில் கல்வெட்டு கட்ட கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பாக ஒப்பந்தம் வழங்கப்பட்டும் இதுவரை பணி துவங்கவில்லை மழைகாலத்துக்கு முன்பாகவே போர்கால அடிப்படையில் பணியை முடிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.193<br>தீர்மானிக்கப்பட்டது. |
| 29–09–2023 | பொருள் எண்.13<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி.எம்.ஜீலைகாபீவி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>➢ 14-வது வார்டில் புதிய நம்பியார் நகர் பகுதியில் புதிதாக அங்கன்வாடி கட்டடம் கட்டி தரவும்.<br>➢ பச்சைபிள்ளை குளத்தினை, தூர்வாரி படித்துறை அமைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.194<br>தீர்மானிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 29–09–2023 | பொருள் எண்.14<br>**நகர் மன்ற உறுப்பினர் திருமதி.கு.ஜோதி லெட்சுமி அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மான நகல் –**<br>➢ 15-வது வார்டுக்குட்பட்ட ஆர்.வி.ஜி. நகருக்கும் என்.ஜி.ஓ – காலனிக்கும் இடைப்பட்ட மழைநீர் வடிகால் வாய்காலில் சிறுபாலம் அமைத்து தரவேண்டும் என்று. கேட்டுக்கொள்கிறேன். (இப்பகுதியில் வசிக்கும் மக்கள் இணைப்பில் உள்ளது போல் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது) ஆகவே மழை காலத்திற்கு முன்பாக இந்த பாலத்தினை உடனடியாக செய்து தரக்கேட்டுக்கொள்கிறேன். சூர்யா நகர் பகுதியின் சமீபத்தில் நகராட்சி நிர்வாகம், நகராட்சிதலைவர் மற்றும் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் ஆகியோரின் தொடர் முயற்சியால் பல வருடங்களுக்கு பிறகு வழங்கப்பட்டது. ஆனால் அங்குள்ள வீடுகள் இடிந்து விழும் தருவாயில் உள்ளது. அவர்களுக்கு அதே இடத்தில் புதிய வீடு கட்டி தரவேண்டும் என்றுக்கேட்டுக்கொள்கிறேன்.சமீபகாலமாக நகரின் அனைத்து பகுதிகளிலும் தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக உள்ளது. வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் மட்டுமே தண்ணீர் வருகிறது. அப்படி வரும் தண்ணீரையும் மின் மோட்டார் மூலம் உறிஞ்சி கொள்வதால் பலர் 2 குடம் தண்ணீர் கூட கிடைக்கமால் மிகவும் அவதி படுகின்றனர். ஆகவே மின்மோட்டார் மூலம் தண்ணீர் உறிஞ்சியவர்களை கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.195<br>தீர்மானிக்கப்பட்டது. |
| 29–09–2023 | பொருள் எண்.15<br>**நகர்மன்ற உறுப்பினர் திருE.S.M. சுரேஷ் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>➢ 16-வது வார்டுக்குட்பட்ட நம்பியார் நகர் பகுதியில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு எதிர்புறம் உள்ள ரோடு முழுவதும் சேதம் அடைந்து பள்ளமாக உள்ளது , அதனால் குழந்தைகள் பள்ளிக்கு செல்லமுடியாத நிலை உள்ளது. எனவே சாலையை சீர்மைத்து தரவும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.196<br>தீர்மானிக்கப்பட்டது. |
| 29–09–2023 | பொருள் எண்.16<br>**நகர்மன்ற உறுப்பினர் திரு. E.S.M. சுரேஷ் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>➢ 16-வது வார்டுக்குட்பட்ட நம்பியார் நகர் பகுதியில் இயங்கி வந்த அங்கன்வாடி கட்டிடம் பழுதடைந்து இடிக்கப்பட்டுவிட்டது. தற்போது ஒரு பழைய பள்ளிக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அய்யா அவர்கள் ஆய்வு செய்து எங்கள் பகுதிக்கு ஒரு அங்கன்வாடி கட்டிடம் அமைத்து தரும்படி இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.<br>➢ எனது 16வது வார்டுக்குட்பட்ட மறைமலை நகர் பகுதியில் உள்ள பூங்காவை சுற்றி மக்கள் நடை பயிற்சி செய்தற்கு ஏதுவாக பேவர் பிளாக் அமைத்து தரும்படி இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.167<br>தீர்மானிக்கப்பட்டது. |
| 29–09–2023 | பொருள் எண்.17<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கு.சித்ரா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>➢27– வது வார்டுக்கு உட்பட்ட மாங்கோட்டை சுவாமி கோவில் பின்புறம், தீமிதி திடல், சுண்ணாம்பு கால்வாய் தெரு, திரௌபதி அம்மன் கோவில் வடபுறம், அந்தோனியார் தெரு, ஆதீதிராவிடர் தெரு ஆகிய தெருக்களுக்கு குருக்கத்தி இருந்து பம்பிங் மெயின் லயன் முலம் குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. அப்படி இருந்தும் எங்கள் பகுதியில் குடிநீர் சரிவர கிடைக்கவில்லை. குடிநீர் வசதி எற்பாடு செய்யது தரவேண்டும். | தீர்மானம் எண்.198<br>தீர்மானிக்கப்பட்டது. |
| 29–09–2023 | பொருள் எண்.18<br>**நகர்மன்ற உறுப்பினர் திரு.ப.ஞானமணி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான** | தீர்மானம் எண்.199 |

| | | |
|---|---|---|
| | நகல்-<br>➢ 36-வது வார்டில் சுகாதார மையம் கட்டிடம் அமைக்க பொதுமக்களால் தேர்வு செய்யப்பட்ட இடத்தில் பயன் பாட்டில் இல்லாத பழைய கழிவுநீர் சுத்தகரிப்பு தொட்டி ஒன்று உள்ளது. அத்தொட்டியினை அகற்றுமாறு இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானிக்கப்பட்டது. |
| 29–09–2023 | பொருள் எண்.19<br>**திட்ட ஒருங்கிணைப்பாளர் நாகப்பட்டினம் ரோட்டரி சங்கம்-**<br>➢ நாகப்பட்டினம் ரோட்டரி சங்கம் நாகப்பட்டினம் VPN கண் மருத்துவமனையின் நன்கொடையின் மூலம் நாகப்பட்டினம் VPN கண் மருத்துவமனை அருகில் பழுதடைந்த நிலையில் உள்ள பேருந்து நிறுத்த பயணிகள் நிழற்குடைகளை நம்ம நாகை நயமான நாகை எனும் 2022-23 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட ரோட்டரி திட்டத்தின் தொடர் நிகழ்வாக 2023-24 ரோட்டரி ஆண்டில் நவீன மயமாக்கி நாகப்பட்டினம் ரோட்டரி சங்கத்தின் சார்பில் பராமரித்திட உரிய அனுமதி கடிதம் அளித்து உதவிட பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.<br>➢ நகராட்சியின் உரிய அனுமதி கடிதம் கிடைத்தவுடன் நாகப்பட்டினம் ரோட்டரி சங்கத்தால் திட்டங்கள் விரைவில் நிறைவேற்றப்பட்டு நாகை நகராட்சிக்கு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். | தீர்மானம் எண்.200<br>தீர்மானிக்கப்பட்டது. |
| 29–09–2023 | பொருள் எண்.20<br>நகர்புறங்களில் பொதுமக்கள் மற்றும் சிறார்களுக்கு இடையூறு மற்றும் ஆபத்து விளைவிப்பதாக பொதுமக்களிடையே புகார்கள் வந்த வண்ணம் உள்ளதனை கட்டுப்படுத்தும் நோக்கில் நாய்களை கணக்கெடுத்து கருத்தடை செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் நாய்களை கணக்கெடுப்பு செய்து கட்டுப்படுத்திடுவதற்கு ஏதுவாக நாய்களுக்கு கருத்தடை செய்யப்படும் இடமானது மிகவும் பழுதடைந்து உள்ளதனை உடன் சீர்செய்திட இந்நகர்மன்ற தீர்மானம் எண்.159 நாள்.31.07.2023 ல் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி நாய்கள் கருத்தடை செய்யும் இடத்தினை மன்ற இணை இயக்குநர் கால்நடை பராமரிப்பு துறை நாகப்பட்டினம் அவர்களால் நேராய்வு செய்யப்பட்டதில் தற்போது செய்யப்படவுள்ள பணிகளில் கூடுதல் அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்காணும் பொருள் தொடர்பாக தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 மேற்கண்ட உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். /2023/எச்1 | தீர்மானம் எண்.201<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 29-09-2023 | பொருள் எண்.21<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சியினால் பராமரிக்கப்பட்டு வரும் பொதுக்கழிப்பிடம் 12 எண்ணிக்கைகள் மற்றும் சமுதாய கழிப்பிடம் 22 எண்ணிக்கைகள் அன்றாடம் பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகின்றன, மேற்படி கழிப்பிடங்களை ஒவ்வொரு 6 மாதத்திற்கும் தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் மூன்றாம் நபர் ஆய்வு (Third party inspection) செய்திட வருகை புரிவதனை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொது மற்றும் சமுதாயக் கழிப்பிடங்களை ஆய்வு செய்து உடன் பராமரிப்பு பணிகள் செய்துதர துப்புரவு ஆய்வரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் பொருள் தொடர்பாக பொது மற்றும் சமுதாயக் கழிப்பிடங்கள் நேராய்வு செய்யப்பட்டு அதன்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 மேற்கண்ட பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண். /2023/எச்1 | தீர்மானம் எண்.202<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 29-09-2023 | பொருள் எண்.22<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 15. மகாலெஷ்மி நகர் (சாய்பாபா கோவில் அருகில்) குடியிருப்பு பகுதியில் பயன்படுத்தப்பட்ட நீரை குழாய் மூலம் வெளியேற்றுவதற்கு வழிவகை இல்லாத காரணத்தினால் அவ்வீடுகளுக்கும் உள்ள சந்தில் கழிவுநீர் சுழற்சி மூலம் தேங்கி நாற்று நோய் பரவும் அபாயம் உள்ளது அப்பகுதியில் புதியதாக பதிப்பதற்கு நகர்மன்ற உறுப்பினர், நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி பொறியாளரால் நேராய்வு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து 180 மீட்டர் நீளத்திற்கு குழாய் பதித்தல் மற்றும் கழிவுநீர் அடைப்பு நீக்கும் தொட்டி அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 மேற்கண்ட பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண். /2023/எச்1 | தீர்மானம் எண்.203<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 29-09-2023 | பொருள் எண்.23<br>நாகப்பட்டினம் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-22ன் கீழ் கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு நூல்கள் கொள்முதல் செய்வதற்காக செலவினத் தொகை ரூ.10.00 இலட்சத்தினை நகராட்சி சார்பாக வழங்கிட நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.27968/2022/தி1 நாள்.28.08.2023 மூலம் தெரிவிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து தொகையினை வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.4003 /2021/இ1 | தீர்மானம் எண்.204<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 29–09–2023 | பொருள் எண்.24<br>தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022 மற்றும் விதிகள் 2023 தொடர்பான பயிலரங்கம் 22.06.2023 அன்று கலைவாணர் அரங்கில் அரசு கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு.நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு நடத்தப்பட்டது . மேற்படி பயிலரங்கத்தில் மாநகராட்சி/நகராட்சி ஆணையர்கள் மண்டல இயக்குநர்கள் , செயற்பொறியாளர்கள் மற்றும் பேரூராட்சி உதவி இயக்குநர்கள் , செயர் அலுவலர்கள் பங்கேற்றனர் . அதனைத்தொடர்ந்து கலைவாணர் அரங்கில் பயிலரங்கம் நடைபெற்றமைக்கான வாடகை , மேடை அலங்காரம் , சிற்றுண்டி மற்றும் உணவு வழங்கப்பட்டமைக்கான நகராட்சி சார்பாக வழங்க வேண்டிய பங்களிப்பு தொகையினை மாநகராட்சி/நகராட்சி , பேரூராட்சிகளின் நிலைக்கேற்ப பங்களிப்பு தொகை நிர்ணயம் செய்யப்பட்டதில் நாகப்பட்டினம் நகராட்சி (தேர்வு நிலை) நகராட்சியின் பங்களிப்பாக தொகை ரூ.15000/- னை நகராட்சி சார்பாக வழங்கிட நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12091/2023/எம்எ2 நாள்.09.08.2023 மூலம் தெரிவிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து தொகையினை வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு — 1 — மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண். 38/2023-2/இ1 | தீர்மானம் எண்.205<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 29–09–2023 | பொருள் எண்.25<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 22 அரியபத்திர பிள்ளை தெரு பகுதியில் மழைநீர் வடிகால் புதியதாக அமைப்பதற்கு நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி பொறியாளரால் நேராய்வு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து 23 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் (சாக்கடை) அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.0.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு — 1 — மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 — மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண். /2023/இ1 | தீர்மானம் எண்.206<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 29–09–2023 | பொருள் எண்.26<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17 நண்டுகுளம் தெரு பகுதியில் மழைநீர் வடிகால் புதியதாக அமைப்பதற்கு நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி பொறியாளரால் நேராய்வு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து 150 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் (சாக்கடை) அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.45 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலககுறிப்பு — 1 — மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 — மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண். /2023/இ1 | தீர்மானம் எண்.207<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 29–09–2023 | **பொருள் எண்.27**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் அரசினால் மவாட்டவாரியாக நடத்தப்பட்ட புத்தக கண்காட்சி 2023 (01.09.2023 முதல் 10 நாட்களுக்கு நடைபெற உள்ளதற்கும் மற்றும் முதல்வரின் பெண்கள் உரிமைத் தொகை திட்டம் தொடங்கும் விழாவிற்கும் வரும் பொதுமக்களுக்கு தற்காலிக கழிவறை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சமாகும். மேற்படி பணியின் அவசியத்தினை கருத்தில்கொண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022 மற்றும் விதிகள் 2023 பிரிவு 57(7)ன் கீழ் இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு. பிரகுநாதன், நாகப்பட்டினம் என்பவரின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதற்கும் மற்றும் அதற்குண்டான பட்டியல் வழங்கப்படவுள்ளதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022 மற்றும் விதிகள் 2023 பிரிவு 57(7)ன் கீழ் பணி மேற்கொள்ளப்பபட்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். /2023/இ1 | தீர்மானம் எண்.208<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 29–09–2023 | **பொருள் எண்.28**<br>நாகப்பட்டினம் நகராட்சி அலுவலக வளாகத்திலுள்ள வருவாய் பிரிவு பணியாளர்கள் அறை , இருப்பு பொருட்கள் வைப்பதற்கான அறைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள காரணத்தினால் அதனை சீர்செய்வதற்கும் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும், வர்ணம் பூசுவதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். /2023/இ1 | தீர்மானம் எண்.209<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 29–09–2023 | **பொருள் எண்.29**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு மேலாண்மை இயக்குநர் , தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம் நாகப்பட்டினம் அவர்களால் சமூக பொறுப்பு நிதி 2022 – 23 ன்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் வளாகம் எதிரில் நவீன முறையில் பயணிகள் நிழற்குடை கட்டும் பணி ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டுள்ளது . மேற்படி பணியின் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத இனங்களான மார்போனைட் தரைதளம் , சுற்றுசுவர் , மின்விளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் மேற்கொள்ள ஆகும் கூடுதல் செலவினத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம் | தீர்மானம் எண்.210<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | ந.க.எண்.1623/2023/இ1 | |
| 29–09–2023 | பொருள் எண்.30<br><br>நாகப்பட்டினம் நகராட்சியில் கல்வி நிதி 2023-24ன் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான இரண்டு பள்ளிகளில் மட்டும் மாதிரி மெய்நிகர் வகுப்பறைக்கு (Smart Class) தேவையான மெய்நிகர் பலகை, பச்சை முலாம் பூசப்பட்ட பலகை , ஒலி அமைப்புடன் கூடிய மேடை மற்றும் ஆசிரியர்கள் அமரும் நாற்காலி அமைத்தல் மற்றும் இதர வகை இனங்கள் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 பணியின் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம் | தீர்மானம் எண்.211<br><br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| | ந.க.எண். 4025/2023/இ1 | |
| 29–09–2023 | பொருள் எண்.31<br><br>நாகப்பட்டினம் நகராட்சி நாகப்பட்டினம் மாவட்டத்தின் தலை நகரில் தேர்வு நிலை நகராட்சியாகும். நாகப்பட்டினம் நகராட்சி 36 வார்டுகள் உள்ளது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 102813 நாகப்பட்டினம் நகராட்சியின் மொத்த பரப்பளவு 14.92 ச.கி.மீ ஆகும். சாலைகளின் மொத்த நீளம் 123.274 கி.மீ ஆகும். நாகப்பட்டினம் நகராட்சியில் பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் தலைமை இடம் ஓடாச்சேரி மற்றும் குறுக்கத்தியிலும் அமைந்துள்ளது. மேலும் 1. கீழ்வேளூர் - ஆழ்துளை குழாய், 2 ஓடாச்சேரி – ஆழ்துளை குழாய், 3, பட்டமங்களம் - ஆழ்துளை குழாய், 4, எரவஞ்சேரி (பள்ளி சந்து) – ஆழ்துளை குழாய் அமைக்கப்பட்டு அவற்றில் இருந்து குடிநீர் பெறப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது இப்பணிகளுக்கு போதுமான அளவில் மோட்டார் பம்பு ஆப்ரேட்டர்கள் இல்லாததாலும் அனைத்து பிரிவுகளிலும் காலியிடங்கள் உள்ளதால் தகுதியான பணியாளர்கள் நகராட்சியில் இல்லை. மேலும் தற்போது ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் வெளிக்கொணர்வு பணியாளர்களின் ஒப்பந்த காலமானது 30.09.2023 அன்றுடன் முடிவடைகிறது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. எனவே குடிநீர் விநியோக பணிகளை மேற்கொள்ள தினக்கூலி அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண்.6721/2023/ஈ1 நாள்.20.06.2023 ன்படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 2023-24ம் ஆண்டிற்கு 01 அக்டோபர் 2023 முதல் 31 மார்ச்2024 வரை 28 தினக்கூலி பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளவும் இதற்கான மாதம் ஒன்றுக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.55 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 2023-24 ம் ஆண்டின் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்<br>3 இச்செலவினத்தினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம் | தீர்மானம் எண்.212<br><br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| | ந.க.எண்.1108/2023/இ1 | |

| | | |
|---|---|---|
| 29–09–2023 | பொருள் எண்.32<br><br>நாகப்பட்டினம் நகராட்சி நாகப்பட்டினம் மாவட்டத்தின் தலை நகரில் தேர்வு நிலை நகராட்சியாகும். நாகப்பட்டினம் நகராட்சி 36 வார்டுகள் உள்ளது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 102813 நாகப்பட்டினம் நகராட்சியின் மொத்த பரப்பளவு 14.92 ச.கி.மீ ஆகும். சாலைகளின் மொத்த நீளம் 123.274 கி.மீ ஆகும். நாகப்பட்டினம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாதாள சாக்கடை திட்டப்பணியில் 84.381 கி. மீட்டர் நீளத்திற்கு கழிவு நீர் பிரதான குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் 15 நீரேற்று நிலையங்கள் மற்றும் உந்து நிலையங்கள் உள்ளது. மேற்படி பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்திட கழிவு நீர் குழாய் வீட்டு இணைப்புகள் வழங்கபட்டு வருகிறது. பாதாள சாக்கடை திட்டப்பணியில் மோட்டார்களை இயக்கிடவும் மற்றும் கனரக வாகனங்கள் செல்வதனால் ஏற்படும் பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திடவும் மற்றும் பிரதான குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்திடவும் தகுதியான தொழில்நுட்ப பணியாளர்கள் நகராட்சியில் இல்லை. மேலும் தற்போது ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் வெளிக்கொணர்வு பணியாளர்களின் ஒப்பந்த காலமானது 30.09.2023 அன்றுடன் முடிவடைகிறது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. எனவே பாதாள சாக்கடை திட்டத்திற்கு உண்டான பணிகளை மேற்கொள்ள தினக்கூலி அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண்.6721/2023/ஈ1 நாள்.20.06.2023 ன்படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 2023-24ம் ஆண்டிற்கு 1 அக்டோபர் 2023 முதல் 31 மார்ச் 2024 வரை 29 தினக்கூலி பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளவும் இதற்கான மாதம் ஒன்றுக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மானம் எண்.213<br><br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | 2023-24 ஆண்டின் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | | |
| | 3 | இச்செலவினத்தினை பாதாளசாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். |

ந.க.எண். 1107/2023/இ1

<table>
<tr>
<td>29-09-2023</td>
<td>
பொருள் எண்.33<br><br>
நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் சில்லடி கடற்கரையினை மேம்பாடு செய்யும் பணிக்கு மூலதன மான்ய நிதி 2023-24ன் கீழ் ரூ.3 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்குவதற்கு திட்ட மதிப்பீடுகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து மேற்காணும் திட்டப்பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை , அதற்கான வரைபடங்கள் , வடிவமைப்புகள் மற்றும் கூர்ந்தாய்வு செய்தல், மண் பரிசோதனை செய்தல், தொழில்நுட்ப அனுமதிக்கு தேவையான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்க இந்நகராட்சியில் போதிய தொழில்நுட்ப பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் வழிகாட்டுதலின்படி தனியார் நிறுவனத்தின் மூலம் விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செய்ய ஆகும் உத்தேச செலவினமான ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><td rowspan="2">அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
<tr><td>2</td><td>மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
</table>
ந.க.எண். /2023/இ1
</td>
<td>தீர்மானம் எண்.214<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>29-09-2023</td>
<td>
பொருள் எண்.34<br><br>
நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-23 ன் கீழ் நாகூர் வண்ணான் குளத்தினை மேம்படுத்தும் பணி ரூ.47.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று முடிவுற்றுள்ளது . மேற்படி திட்டப்பணியினை நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட நிர்வாகம், நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர் , தமிழக மீன் வளர்ச்சி கழக தலைவர் மற்றும் நகராட்சி அலுவலர்களால் நேராய்வு செய்யப்பட்டதில் கூடுதல் பணிகளான குளத்திற்கு மழைநீர் உட்புறம் வரும் பாதை அமைத்தல் (பைப் கல்வெர்ட்), Chute wall மற்றும் வர்ணம் பூசுதல் போன்ற இதர பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.156 நாள்.31.07.2023ல் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்ட தொகையில் பணி மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளது எனவே மேற்காணும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது
<table>
<tr><td rowspan="2">அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
<tr><td>2</td><td>மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
</table>
ந.க.எண். /2023/இ1
</td>
<td>தீர்மானம் எண்.215<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 29–09–2023 | பொருள் எண்.35<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10 அம்பேத்கார் நகர் சுனாமி குடியிருப்பு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகளில் (54 எண்ணிக்கைகள்) அடைப்புகள் ஏற்பட்டு பொதுசுகாதாரக்கேடு விளைவிப்பதால் அதனை உடன் நிவர்த்திக்கும் பொருட்டு அப்பகுதியினை மாவட்ட நிர்வாகம், நகர்மன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகராட்சி அலுவலர்களால் நேராய்வு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்காணும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண். /2023/இ1 | தீர்மானம் எண்.216<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 29–09–2023 | பொருள் எண்.36<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17 ஏழைப்பிள்ளையார் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் மழைநீர் தேங்கி பொதுசுகாதாரக்கேடு விளைவிக்கிறது. அதனைத்தொடர்ந்து மேற்படி இடத்தினை நகர்மன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகராட்சி அலுவலர்களால் நேராய்வு செய்யப்பட்டது. எனவே மேற்காணும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண். /2023/இ1 | தீர்மானம் எண்.217<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 29–09–2023 | பொருள் எண்.37<br>வருகின்ற வடகிழக்கு பருவமழை 2023னை முன்னிட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. | தீர்மானம் எண்.218<br>அ.கு.வார்டு எண்.1 முதல் 12வரை, வார்டு எண்.13 முதல் 24 வரை, வார்டு எண்.25 முதல் 36 வரை தலா ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து பணியினை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. |

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 36 வரை உள்ள வார்டு பகுதிகளில் உள்ள வாய்க்கால்களை ( Hittachi and JCB) மூலம் சுத்தப்படுத்துதல் மற்றும் அகற்றுதல் பணி | 5.00 |
| 2 | வார்டு எண்.1 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் தேங்கும் மழைநீரை ஆயில் இன்ஜின் கொண்டு | 2.50 |

| | | |
|---|---|---|
| | வெளியேற்றுதல் பணி | |
| 3 | இயற்கை இடர்பாடு காலங்களுக்கு தேவையான மணல் மூட்டைகள் மற்றும் இதர அத்தியாவாசிய பொருட்கள் விநியோகம் செய்தல் பணி | 2.00 |
| | மொத்தம் | 9.50 |

மேற்கண்ட அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். |

ந.க.எண்.2103/2023/இ1

29-09-2023

பொருள் எண்.38

தீர்மானம் எண்.219

அ.கு.அனுமதிக்கப்பட்டது

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் வருடாந்திர குத்தகை இனங்கள் மூன்றாண்டுகள் உரிமக்காலம் முடிவடைந்ததால், மேற்படி குத்தகை இனங்களை ஒப்படைக்கும் நாள்முதல் மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி உரிமம் ஒப்படைப்பு செய்வதற்கும், மேற்படி குத்தகை இனங்களுக்கு செலுத்தவேண்டிய ஏல முன் வைப்புத்தொகை , சொத்துமதிப்பு அசல் சான்றிதழ், சொத்து மதிப்பு அளிக்காவிட்டால் செலுத்தவேண்டிய கூடுதல் பொறுப்பு தொகை ஆகியன நிர்ணயம் செய்யவும் பொது ஏலத்திற்கான விளம்பர கட்டணம் மற்றும் இதர செலவினங்கள் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/-ம் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | குத்தகைஇனம் விபரம் | ஏல முன்வைப் புத் தொகை | சொத்துமதிப்பு அசல் சான்றிதழ் கொடுக்கவேண்டிய தொகை ரு | சொத்துமதிப்பு அளிக்காவிட்டால் செலுத்தவேண்டிய கூடுதல் பொறுப்பு தொகை ரு |
|---|---|---|---|---|
| 1 | நாகப்பட்டினம் அக்கரைகுளம் சந்திப்பு பகுதி அடிக்கடைகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 10,000 | 25,000 | 10,000 |
| 2 | நாகப்பட்டினம் பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள மறைமலை அடிகளார் மிதிவண்டி நிலையத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1,00,000 | 2,00,000 | 1,00,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | நாகப்பட்டினம் ஆடு அறுக்கும் தொட்டியில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1,00,000 | 50,000 | 1,00,000 |
| 4 | நாகப்பட்டினம் எண்ணெய் கடை சந்து கட்டணம் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 50,000 | 1,00,000 | 50,000 |
| 5 | நாகப்பட்டினம் ஆசாத் நாளங்காடியில் உள்ள மீன் கடைகளில் கட்டணம் வசூல் | 50,000 | 1,00,000 | 50,000 |
| 6 | நாகூர் தர்கா பின்புறம் அமைந்துள்ள வசூல் | 50,000 | 1,00,000 | 50,000 |
| 7 | நாகூர் புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் | 25,000 | 50,000 | 25,000 |
| 8 | நாகூர் யாணைக்கட்டி முடுக்கு கட்டணம் கழிப்பிடம் வசூல் | 3,00,000 | 6,00,000 | 3,00,000 |
| 9 | நாகப்பட்டினம் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் வசூல் | 50,000 | 1,00,000 | 50,000 |

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க.எண்.4370/2017/ அ4

/உண்மை நகல்/

இரா.மாரிமுத்து
நகரமன்ற தலைவர்